**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.24** **நாள் : 22.01.2024**

**சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் /கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.01.2024) வெளியிட்டார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.01.2024) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள், 2024-ஆம் ஆண்டிற்கான சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல்கள் கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்டன.

01.01.2024 அன்று தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியல்களில் பெயர்கள் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் உள்ள பதிவுகளில் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து உரிய படிவங்கள் 27.10.2023 முதல் 09.12.2023 முடிய பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட படிவங்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரால் நேரடி ஆய்விற்கு பின்னர் சட்டமன்றத் தொகுதியினை சார்ந்த வாக்காளர் பதிவு அலுவலர்களால் படிவங்கள் ஏற்பு அல்லது நிராகரிப்பு குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. ஏற்பளிப்பு செய்யப்பட்ட படிவங்கள் அடிப்படையில் 2024ஆம் ஆண்டிற்கான துணைப் பட்டியல்கள் உடனான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளன. அத்துணைப் பட்டியல்கள் உடனான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் இன்று (22.01.2024) வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்கள் பார்வையிடலாம். மேலும், www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் பார்த்து கொள்ளலாம்.

கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் சென்னை மாவட்டத்தினைச் சார்ந்த 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மொத்த வாக்காளர்களது எண்ணிக்கை விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் | 19,01,911 |
| 2. | பெண்கள் | 19,65,149 |
| 3 | இதரர் | 1,118 |
| | **மொத்தம்** | **38,68,178** |

2024ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தொடர்பாக 69,079 பெயர் சேர்த்தல் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் | 32,774 |
| 2. | பெண்கள் | 36,255 |
| 3 | இதரர் | 50 |
| | **மொத்தம்** | **69,079** |

மேற்படி பெறப்பட்ட படிவங்கள் மீது உரிய ஆணை பிறப்பிக்கபட்டு துணைப் பட்டியல்களில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களது எண்ணிக்கை 68,823 அதன் விவரம் கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் | 32,662 |
| 2. | பெண்கள் | 36,111 |
| 3. | இதரர் | 50 |
| | **மொத்தம்** | **68,823** |

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட இடம் பெயர்ந்தோர், காலமானோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளில் இடம் பெற்றோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் பெயர் நீக்கம் செய்ய கோரி வரப்பெற்ற படிவம்-7ன் எண்ணிக்கை 49,482 ஆகும். அவற்றில் வாக்காளர் பதிவு அலுவலர்களது விசாரணைக்கு பின்னர் வாக்காளர் பட்டியல்களிலிருந்து பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 35,834 ஆகும். மேலும், எந்த பெயர்களும் தகுதியின்மை அடிப்படையில் தன்னிச்சையாக (SUO-MOTU) நீக்கம் செய்யப்படவில்லை.

மேலும், இவ்வாறு அனைத்து தொகுதிகளிலும் உள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து உரிய நடைமுறையை பின்பற்றி இறந்து போன, நிரந்தரமாக குடிபெயர்ந்தவர்கள் மற்றும் பலமுறை பட்டியலில் பதிவுகள் (REPEATED) ஆகிய பெயர்கள் தொடர் திருத்தம் மற்றும் சிறப்பு சுருக்கத் திருத்த காலங்களில் நீக்கம் செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள்

1. ஆண்கள் 17,399

2. பெண்கள் 18,423

3 இதரர் 12

மொத்தம் 35,834

மேற்குறிப்பிட்ட 35,834 நீக்கம் செய்யப்பட்ட பெயர்களில், 469 இறந்தவர்கள், 25,291 நிரந்தரமாக குடிப்பெயர்ந்தவர்கள் மற்றும் 10,074 பலமுறை பட்டியலில் பதிவு (REPEATED).

இன்று வெளியிடப்பட்ட இறுதி திருத்தப் பட்டியலுக்கு பின்னர் சென்னை மாவட்டத்தில் அமையப்பெற்ற 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர்களது எண்ணிக்கை விவரங்கள்

| வ. எண் | எண் மற்றும் சட்டமன்றத் தொகுதியின் பெயர் | ஆண்கள் | பெண்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 11.டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் | 116197 | 124803 | 109 | 241109 |
| 2 | 12. பெரம்பூர் | 138040 | 142667 | 80 | 280787 |
| 3 | 13. கொளத்தூர் | 137714 | 144205 | 73 | 281992 |
| 4 | 14. வில்லிவாக்கம் | 117412 | 121933 | 63 | 239408 |
| 5 | 15. திரு.வி.க.நகர் (தனி) | 104541 | 110720 | 56 | 215317 |
| 6 | 16. எழும்பூர் (தனி) | 94906 | 96733 | 61 | 191700 |
| 7 | 17. இராயபுரம் | 93499 | 97833 | 66 | 191398 |
| 8 | 18. துறைமுகம் | 89569 | 82996 | 59 | 172624 |
| 9 | 19. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | 114226 | 118394 | 52 | 232672 |
| 10 | 20. ஆயிரம் விளக்கு | 114478 | 119681 | 102 | 234261 |
| 11 | 21. அண்ணாநகர் | 133485 | 138921 | 96 | 272502 |
| 12 | 22. விருகம்பாக்கம் | 138308 | 139683 | 87 | 278078 |
| 13 | 23. சைதாப்பேட்டை | 131733 | 136536 | 86 | 268355 |
| 14 | 24. தியாகராயநகர் | 113465 | 116536 | 48 | 230049 |
| 15 | 25. மயிலாப்பூர் | 127252 | 135160 | 41 | 262453 |
| 16 | 26. வேளச்சேரி | 152310 | 156074 | 78 | 308462 |
| **மொத்தம்** | | **1917135** | **1982875** | **1157** | **3901167** |

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட நாளிலிருந்து ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாளில் உள்ள வேறுபாடுகளின் விவரங்கள்

| எண் மற்றும் சட்டமன்றத் தொகுதியின் பெயர் | விரைவு வாக்காளர் பட்டியலின்படி (27-10-2023) | | | | இறுதி வாக்காளர் பட்டியலின்படி (22-01-2024) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | இதரர் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | இதரர் | மொத்தம் |
| 11.டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் | 114638 | 123133 | 105 | 237876 | 116197 | 124803 | 109 | 241109 |
| 12. பெரம்பூர் | 136533 | 140987 | 77 | 277597 | 138040 | 142667 | 80 | 280787 |
| 13. கொளத்தூர் | 136329 | 142467 | 72 | 278868 | 137714 | 144205 | 73 | 281992 |
| 14. வில்லிவாக்கம் | 116286 | 120669 | 61 | 237016 | 117412 | 121933 | 63 | 239408 |
| 15. திரு.வி.க.நகர் (தனி) | 103608 | 109696 | 53 | 213357 | 104541 | 110720 | 56 | 215317 |
| 16. எழும்பூர் (தனி) | 93802 | 95545 | 56 | 189403 | 94906 | 96733 | 61 | 191700 |
| 17. இராயபுரம் | 92761 | 96852 | 63 | 189676 | 93499 | 97833 | 66 | 191398 |
| 18. துறைமுகம் | 88385 | 81810 | 59 | 170254 | 89569 | 82996 | 59 | 172624 |
| 19. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | 113256 | 117236 | 46 | 230538 | 114226 | 118394 | 52 | 232672 |
| 20. ஆயிரம் விளக்கு | 113805 | 118767 | 100 | 232672 | 114478 | 119681 | 102 | 234261 |
| 21.அண்ணாநகர் | 132467 | 137704 | 88 | 270259 | 133485 | 138921 | 96 | 272502 |
| 22.விருகம்பாக்கம் | 137599 | 138753 | 89 | 276441 | 138308 | 139683 | 87 | 278078 |
| 23.சைதாப்பேட்டை | 130888 | 135547 | 87 | 266522 | 131733 | 136536 | 86 | 268355 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 24.தியாகராயநகர் | 112898 | 115901 | 44 | 228843 | 113465 | 116536 | 48 | 230049 |
| 25.மயிலாப்பூர் | 126724 | 134634 | 38 | 261396 | 127252 | 135160 | 41 | 262453 |
| 26.வேளச்சேரி | 151932 | 155448 | 80 | 307460 | 152310 | 156074 | 78 | 308462 |
| **மொத்தம்** | **1901911** | **1965149** | **1118** | **3868178** | **1917135** | **1982875** | **1157** | **3901167** |

தற்போது வெளியிடப்பட்டுள்ள இறுதி திருத்தப் பட்டியலில் வாக்காளர்களது எண்ணிக்கை, கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களது எண்ணிக்கையினை விட 32,989 அதிகம் என்றும், இந்த எண்ணிக்கை வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களை விட 0.85 சதவீதம் அதிகம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இந்த சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களில் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2023 முதல் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் எண்ணிக்கை 37,442 .

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக எண் 18. துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 1,72,624 வாக்காளர்களும், அதிகபட்சமாக எண்.26. வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 3,08,462 வாக்காளர்களும் உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.சி.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**